மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின்
செயல்முறைகள்
முன்னிலை திரு.V.செல்வராஜ்

அனுமதி எண்: 1/2023-2024 நாள்:19.05.2023

பொருள்: கரூர் மாவட்டம் - கரூர் வட்டம் - தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் - மூக்கணாங்குறிச்சி கிராம ஊராட்சி -சர்வே எண்.541/1B, 2B, 4Aல் 2.135 ஏக்கர் (0.86.42 ஹெக்டேர்) பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக

பார்வை :1.அரசாணை நிலை எண்:71, ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள்:16.06.2003

2.மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், உதவி இயக்குநர் கரூர் அவர்களின் ROC NO:T4R1HWE2/2022/TCP நாள்:03.01.2023

3.வெள்ளியணை சார்பதிவகம் 1 புத்தகம் எண்.1116/2023 நாள்:02.03.2023

4.மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்ற தீர்மான எண்.42/2023-2024 நாள்:28.04.2023

5.மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், உதவி இயக்குநர் கரூர் அவர்களின் ROC No:T4R1HWE2/2022/TCP நாள்:13.04.2023

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், மூக்கணாங்குறிச்சி கிராம ஊராட்சி சர்வே எண்.541/1B, 2B, 4Aல் 2.135 ஏக்கர் (8642 ச.மீட்டர்) பரப்பளவு கொண்ட செல்வ முருகன் அவென்யூ Phase-II என பெயரிடப்பட்ட மனைப்பிரிவுக்கு ஒப்புதல் கோரி பார்வை எண்.2ல் காணும் விண்ணப்பத்தின் படி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. பார்வை 4ல் காணும் விவரப்படி இம்மனைப் பிரிவினை அங்கீகரித்து மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்ற தீர்மான எண்:42/2023-2024, நாள்:28.04.2023 தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. பார்வை 5ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் , கரூர் 13.04.2023ந் தேதிய கடிதத்தின்படி மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திற்கு உரிய நிபந்தனைகளுடன் ம.வ./மா.ந.ஊ.அ(கமா) எண்.120/2023 என எண்ணிடப்பட்டு இறுதி மனைபிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்தும், சாலைகள், அமைத்தும் சாக்கடைகள் கட்டியும் அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளார்.

மேலும் நிபந்தனையின் அடிப்படையில் மனைப்பிரிவின் சந்தை மதிப்பு தொகையில் 3% விழுக்காடு தொகை ரூ.11537/-ஐ பல்வகை ரசீது எண்:2850 நாள்:19.05.2023 மற்றும் கூறாய்வு கட்டணம் (41*1000) ரூ.41000/- பல்வகை ரசீது எண்.2851 நாள்:19.05.2023 மூக்கணாங்குறிச்சி ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் 3922.67 ச.மீட்டர் பொது ஒடுக்கீடு 31.36 ச.மீட்டர் (0.66%), மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான 31.31 ச.மீட்டர் (0.66%) ஆகியவற்றை பார்வை 3ல் காணும் ஆவணம் மூலம் மூக்கணாங்குறிச்சி ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையிலும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் இவர்களது இறுதி ஒப்புதல் அடிப்படையில் நிபந்தனைகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் மூக்கணாங்குறிச்சி கிராமம் சர்வே எண்.541/1B, 2B, 4A-ல் 2.135 ஏக்கர் (0.86.42 ஹெக்டேர்) பரப்பளவு கொண்ட செல்வ முருகன் அவென்யூ Phase - II என பெயரிடப்பட்ட மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

தலைவர்
மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்றம்
தான்தோணி ஊராட்சி ஒன்றியம்
கரூர் மாவட்டம்

பெறுதல்
திரு.P.வேலுச்சாமி
த/பெ.பழனியப்பன்
கதவு எண்.6
அசோக் நகர் 1-வது கிராஸ், ராயனூர்
கரூர் வட்டம், கரூர் மாவட்டம்.

நகல்
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.9, முதல் தளம்,
இலட்சுமிபுரம் வடக்கு தெரு, கரூர் வட்டம், கரூர் மாவட்டம்-639001

மூக்கணாங்குறிச்சி ஊராட்சி மன்றம்

கூட்ட நடவடிக்கை நகல்

2023-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் நாள் வெள்ளி கிழமை காலை / மாலை 11.00 மணிக்கு மூக்கணாங்குறிச்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற மேற்படி ஊராட்சியின் சாதரண அவசர / சிறப்பு கூட்ட நடவடிக்கை நகல்,

முன்னிலை திரு.V.செல்வராஜ்

தலைவர் உட்பட கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை - 13

பொருள்	தீர்மானம்
மூக்கணாங்குறிச்சி ஊராட்சி சர்வே எண்.541/1B, 2B, 4A-ல் 2.135 ஏக்கர் 0.86.42 ஹெக்டேர் பரப்பளவில் அமையும் செல்வ முருகன் அவென்யூ Phase - II மனைப்பிரிவில் உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் 3922.67 ச.மீ பொது ஒதுக்கீடு 31.36 ச.மீட்டர் (0.66%), மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான 31.31 ச.மீட்டர் (0.66%), ஊராட்சிக்கு தானமாக வழங்கி வெள்ளியணை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.1116/2023 ன் படி ஒப்படைப்பு செய்து திரு.P.வேலுச்சாமி த/பெ பழனியப்பன் கதவு எண்.6 அசோக் நகர் 1-வது கிராஸ், ராயனூர், கரூர் வட்டம், கரூர் மாவட்டம் என்பவர் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தை ஏற்று ஒப்படைப்பு பூமியை ஊராட்சியின் கட்டுபாட்டிலும் பராமரிப்பிலும் வைத்துக் கொள்ளமன்ற அனுமதிக்கு	தீர்மானம் எண்.42/2023-2024 ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தலைவர் மூக்கணாங்குறிச்சி ஊராட்சி தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் கரூர் மாவட்டம்.

(உண்மை நகல்)